முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1247

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.02.2023, திங்கட்கிழமை

1. தர்மபலமாய் நின்று அருளுகின்ற
   தவசியே ஆறுமுக அரங்கனே
   பெருமைமிக்க உன் அவதாரம் சித்திக்க
   பேருலகமெல்லாம் ஏற்று ஞானிகளாக உலகோர் மாற
2. மாறவே ஆறுமுகப்பெருமான் யானும்
   மாதவசிக்கு ஞான அறிவுரை ஆசிதனை
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 15 ம் நாள் 27.02.2023, திங்கட்கிழமை)
   ஆறுதல்பட அனுதினம் சக்தியாக
   அறிவிப்பேன் அருட்சுவடி மூலமாக
3. ஆகவே அரங்கன் அவதாரம் உலகமாற்றத்துக்கு
   ஆக்கம் தரும் பேரவதாரமாக
   ஜெகமக்கள் அரங்கன் அவதாரத்தை உணர்ந்து
   சித்திவேண்டி அரங்கனை தொடர்ந்து வந்து செல்ல
4. இந்த யுகத்தில் அரங்கன் தொடர்பு கொண்ட மக்களெல்லாம்
   இனி பிறவாத பெரும்பேற்றுக்கு தகுதிபெற்று
   விந்தைபட ஞானிகளாகவும் விரைந்து அரங்கன் உலகமாற்றம் செய்கின்ற
   சிந்தைமிகு ஞானிகளாகவும் சித்தி பெற்றவர்களாகவும் ஜெகத்தினில் முன்னின்று
5. ஞான ஆட்சி அமைய உண்டான
   ஆனதொரு அரிய பெரும் சேவைதனை
   அனைவரும் கலந்து முடிக்க அருளும் பலமும்
   ஆறுமுகன் என் தயவோடு உண்டுஉண்டு
6. உண்டான இந்தவித நோக்கத்தை
   உயர்வாக உலகோர் இணைந்து கலந்து
   சிந்தை ஏற்றி அரங்கன் திருவடிபற்றி
   செபதபமோடு அரங்கன் வகுத்த தர்மத்தை
7. தர்மத்தை உலகமெல்லாம் தொடர்ந்து செய்தால்
   தானாகவே இந்த உலகமாற்றம் தானும்
   ஆறுமுகன் என் சூட்சும இயக்கமாக
   செயல்வடிவாகி அகிலமெல்லாம் ஞான ஆட்சி மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–